**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1223/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பிலாரண்ஸ்** | **Caste** | : | |
| **Husband's Name** | : | அன்புராஜ் | **Calling** | : | **வீட்டுக்குடித்தனம்** |
| **Village** | : | **பாறைப்பட்டி, திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **02.03.2026.** |

**02.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திருமதி. **பிலாரண்ஸ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் பாறைப்பட்டி அந்தோனியார் தெருவில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். இவ்வழக்கு சம்வபத்தில் இறந்த லூயில் ரெஜினா தோமை எனது அம்மா. பட்டியல் சாட்சி ஒன்று ஸ்டீபன்

ராஜ் எனது தம்பி. அவர் தற்போது இறந்து விட்டார். கடந்த 25.07.2025 தேதி மதியம் 1.30 மணிக்கு நானும் எனது அம்மாவும் எனது வீட்டின் முன்பாக உள்ள ரோட்டிற்கு பக்கத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எனது அம்மா கோவிலுக்கு செல்வதாக சொல்லிவிட்டு நடந்து சென்றார். அப்போது கிழகிலிருந்து மேற்கு நோக்கி வந்த Force வண்டி வேகமாக வந்தது. அப்போது அந்த வண்டியின் பின்பக்க இடது பக்க டயர் தீடீரென கழன்டு எனது அம்மாவின் இடதுபக்க முகம், நெஞ்சு ஆகிய பகுதிகளில் இடித்துவிட்டது. உடனே எனது அம்மா மயங்கி விழுந்து விட்டார். Force வண்டியை ஓட்டிய நபரை நான் சம்பவ இடத்திலேயே பார்த்தேன். அவரது பெயர் புதுப்பட்டி பொன்மான்துரையை சேர்ந்த மகாலிங்கம் என்று சொன்னார். ஆஜர் எதிரிதான் அதை ஓட்டிய நபர் ஆவார். உடனே எனது அம்மாவை தனியார் ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவமணையில் இருந்த போது போலிசார் வந்து விசாரிக்க எனது தம்பி ஸ்பன்ராஜ் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க புகார் எழுதிக் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகாரில் உள்ள கையொப்பம் எனது தம்பி உடையது. **புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது,** பின்னர் எனது அம்மாவை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம், அங்கு மூன்று நாட்கள் எனது அம்மாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு சிகிச்சை பலனின்றி எனது அம்மா இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது அம்மாவிற்கு 78 வயது. எனது அம்மா எனது தம்பியுடன் தனியாக வசித்து வந்தார். எனது வீட்டிற்கும் அந்த வீட்டிற்கும் 100 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் இல்லை பின்னாடி தான் வீடு. எந்த கோவிலுக்கு சென்றார் என்றால் ரோட்டின் எதிர்பக்கம் இருந்த அந்தோனியார் கோவில். நான் எனது அம்மாவுடன் கோவிலுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனது அம்மா வயதான காரணமாக கவனக்குறைவாக ரோட்டை கிராஸ் செய்தார் என்றும் அதனால் தான் எதிரி சடன் பிரேக் அடித்தார் என்றாலும் அதனால் தான் பின்சக்கரம் கழன்று என் அம்மா மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்பட்ட பகுதியில் நிறைய வாகனங்கள் அடிக்கடி சென்று வரும் என்றால் சரிதான். கனரகவாகனங்கள் செல்லக்கூடிய நெடுஞ்சாலை

என்றால் சரிதான். அந்த சாலையை கடந்து செல்லவேண்டும் என்றால் அதிக தூரம் சென்று சிக்னலுக்கு சென்று தான் கிராஸ் செய்ய வேண்டும் என்றால் சரிதான். எல்லாரும் ரோட்டை கடந்து செல்வார்கள். சிக்னலில் உள்ள பாதையில் கடக்காமல் ரோட்டின் கோவிலுக்கு எதிரே செல்வதற்காக இடையிலேயே கவனக்குறைவாக கடந்து சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலிசார் சொன்னதன் பேரில் சொல்லியுள்ளேன் என்றாலும் அவர்கள் சொன்னதன் பேரில் இழப்பீடு பெறுவதற்காக புகாரில் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.02 14:52:16 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 1223/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மார்சின்** | **Caste** | : | |
| **Father's Name** | : | ஜோசப் | **Calling** | : | **சொந்த தொழில்** |
| **Village** | : | **அந்தோனியார்தெரு** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **68** |
| | | | **Dated** | : | **02.03.2026.** |

**02.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு. **மார்சின்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டி அருகில் உள்ள அந்தோனியர் தெருவில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த லூயில் ரெஜினா தோமை என்பவரை தெரியும். கடந்த 25.07.2025 ம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு நான்

எனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன், அப்போது லூயில் ரெஜினா எனது வீட்டிற்கு சுமார் ஐந்து அடி தூரத்தில் நின்று ரோட்டிற்கு எதிரே உள்ள சர்ச்சை பார்த்து சாமி கும்பிட்டு கொண்டீந்தார். அப்போது மேற்கிருந்து கிழக்கு நோக்கி ஒரு நான்கு சக்கரவாகனம் வேகமாக வந்தது. அப்போது திடீரென அதன் ஓட்டுநர் பிரேக்கை பிடித்த போது அந்த வாகத்தின் பின்பக்க இடதுபக்க சக்கரம் கழன்று லூயில் ரெஜினாவின் இடது பக்க நெற்றி,கண், மார்பு ஆகிய இடங்களில் வேகமாக மோதி விட்டது. உடனே அவர் மயங்கி விழுந்து விட்டார். ஆஜர் எதிரிதான் அந்த வாகனத்தை ஓட்டியவர் ஆவார். அவரை நான் சம்பவ இடத்திலேயே பார்த்தேன். காயம்பட்ட லூயிஸ் ரெஜினாவை தனியார் ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அவரை மதுரை அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் நான் எதையும் பார்க்க வில்லை என்றாலும் இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ
Digitally signed by PACKIARAJ
Date: 2026.03.02 14:52:24 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1223/2025**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **அன்புராஜ்** | **Caste** | : |
| **Father's Name** | : தனீஸ்லாஸ் | **Calling** | : **கூலி வேலை** |
| **Village** | : **அந்தோனியார் கோவில்தெரு** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **59** |
| | | **Dated** | : **02.03.2026.** |

**02.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 5 திரு. **அன்புராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டி அந்தோனியார்கோவில் தெருவில்குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 26.07.2025 ம் தேதி காலை எட்டு மணிக்கு முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக போலிசார் குடைப்பாறைப்பட்டி

அந்தோனியார் கோவிலுக்கு எதிரே சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நானும் எட்வின் ராஜா என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இறந்து போன நபரின் குடியிருப்பு பகுதிக்கு ரோட்டின் எதிர்புறம் தான் அந்தோனியார் கோவில் உள்ளது என்றால் சரிதான். ரோட்டின் நடுப்பகுதியின் சென்டர் மீடியன் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியை கடக்க அனுமதியில்லை என்றாலும் சற்று தொலைவில் உள்ள சிக்னலில் சென்றுதான் கடக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் பார்வைமகஜரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.02 14:52:31 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 1223/2025**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: எட்வின்ராஜா** | **Caste** | **:** |
| **Father's Name** | **: ஜேம்ஸ்** | **Calling** | **: சொந்த தொழில்** |
| **Village** | **: AB நகர்** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **: 45** |
| | | **Dated** | **: 02.03.2026.** |

**02.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 6 திரு. **எட்வின்ராஜா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டி AB நகரில் தெருவில்குடியிருந்து சொந்த தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 26.07.2025 ம் தேதி காலை எட்டு மணிக்கு முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக போலிசார் குடைப்பாறைப்பட்டி

அந்தோனியார் கோவிலுக்கு எதிரே சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நானும் அன்பு ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன நபரின் குடியிருப்பு பகுதிக்கு ரோட்டின் எதிர்புறம் தான் அந்தோனியார் கோவில் உள்ளது என்றால் சரிதான். ரோட்டின் நடுப்பகுதியின் சென்டர் மீடியன் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியை கடக்க அனுமதியில்லை என்றாலும் சற்று தொலைவில் உள்ள சிக்னலில் சென்றுதான் கடக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் பார்வைமகஜரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் இறந்து போன நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.02 14:52:38 +0530

Judicial Magistrate No.I

Dindigul.